**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பாலக்கோடு.**

**முன்னிலை** : திரு.G.அஜய் விக்ரிஷ் குமார்.B.B.A.,LLB., (Hons)

குற்றவியல் நீதித்துறை நடுவர், பாலக்கோடு.

**2026-ம் ஆண்டு மே மாதம் 05-ம் நாள் செவ்வாய்கிழமை**

**ஜீவனாம்ச மனு எண் – 03/2022**

**CNR.No.TNDP05002699-2022**

1. மங்கம்மாள் (வயது 26) க/பெ. மாரிமுத்து.
2. மைனர் ஜானுஸ்ரீ த/பெ. மாரிமுத்து.
3. மைனர் லித்திஸ் த/பெ. மாரிமுத்து

(மைனர் மனுதாரர்களுக்கு கார்டியன் தாயார் 1-ம் மனுதாரர் மங்கம்மாள்)

**1 முதல் 3 மனுதாரரின் முகவரி**

க.எண்.2/474 வீராசனூர் கிராமம்,
பாலக்கோடு தாலுக்கா.

...... மனுதாரர்கள்

/எதிராக/

மாரிமுத்து (வயது 33)
த/பெ. கண்ணு,
பனந்தோப்பு கிராமம்,
எம்.சவுளூர் , மிட்டஅள்ளி,
கிருஷ்ணகிரி மாவட்டம் ....... எதிர்மனுதாரர்

இம்மனு இந்நீதிமன்றத்தில் கடந்த 15.04.2026ம் தேதி இறுதியாக என் முன்னர் விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.G.கார்த்திகேயன்,B.Sc.,B.L., மற்றும் திரு.N.சிலம்பரசன்,M.Sc.,B.L., ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.R.சின்னதம்பிB.Sc.,LLB.,PGDCo.M., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்டும், வழக்கு ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழக்கும்

**உத்தரவு**

1) மனுதாரரால் குற்றவிசாரணை முறைச்சட்டம் பிரிவு 125-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டது.

AJAY VIKRESH KUMAR G Digitally signed by AJAY VIKRESH KUMAR G Date: 2026.05.05 06:34:58 +0530

**2) மனுதாரர் மனுவின் சுருக்கம்**

i) 1–ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் 30.05.2018–ம் தேதி பிக்கனஅள்ளியில் உள்ள சென்றாயசாமி கோவிலில் பெரியோர்களரால் நிச்சயிக்கப்பட்ட திருமணமானது இந்து முறைப்படி நடந்ததாகவும், 1–ம் மனுதாரரின் பெற்றோர்கள் திருமணத்தின் போது சீர்வரிசையாக 20 பவுன் நகை, பீரோ, கட்டில் உள்ளிட்ட பொருட்களை கொடுத்து திருமண செலவுகளையும் ஏற்றுக்கொண்டதாகவும், எதிர்மனுதாரர் பெங்களூரில் உள்ள தனியார் கம்பெனியில் Facility Engineer ஆக பணிபுரிந்த நிலையில் 1–ம் மனுதாரர் B.Sc. முடித்துவிட்டு ஆசிரியர் பயிற்சி படிப்பிற்கு தயராகி இருந்த நிலையில் திருமண ஏற்பாடு செய்ததால் மனுதாரரை படிக்க வைப்பதாக வாக்குறுதி கொடுத்து வற்புறுத்தி திருமணம் செய்துகொண்ட நிலையில் சில நாட்கள் மட்டுமே சுமுகமான முறையில் வாழ்ந்தபோதும். 1–ம் மனுதாரரின் பெற்றோர் மற்றும் உறவினர்களை திருமண சடங்கு எதையும் செய்யவிடாமல் தடுத்து வந்ததாகவும்.

(ii) காஞ்சிபுரத்தை சேர்ந்த அரசு மருத்துவமனையில் பணிபுரியும் செவிலியராக திலகவதி என்பவர் முன்னிலைப்படுத்திக்கொண்டு தொந்தரவு செய்து வந்த நிலையில் எதிர்மனுதாரரிடம் கேட்டதற்கு தனது நெருங்கிய நண்பர் என்று கூறிகொண்டு திருமண வேலையிலேயே திலகவதியுடன் இயல்புக்கு மாறான முறையில் கட்டிப்பிடித்து கொண்டு புகைப்படத்தை எடுத்ததாகவும், எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் எதிர்மனுதாரரின் நடத்தையை கண்டிக்காமல் அதற்கு ஆட்சேபித்த மனுதாரரின் பெற்றோருடன் சண்டையிட்டதாகவும்,

(iii) பின்னிட்டு திருமணத்தின் பயனாக 1–ம் மனுதாரருக்கும். எதிர்மனுதாரருக்கும் 12.05.2020 அன்று ஜானுஸ்ரீ என்ற பெண் குழந்தை பிறந்தநிலையில் பிரசவ செலவு உள்ளிட்ட மருத்துவ செலவுகளை 1–ம் மனுதாரரின் பெற்றோர்கள் செய்ததாகவும், திருமணமான நாள் முதல் குழந்தை பிறந்ததற்கு பின்னிட்டும் மனுதாரர்களுக்கு தேவையான உணவு, உடை மருத்துவம் எதையும் எதிர்மனுதாரர் கண்டுகொள்ளாத நிலையில் மளிகை பொருட்கள் உள்ளடக்கங்களாக குழந்தை வளர்ப்புக்கு தேவையான அத்தியவாசியமான அனைத்து பொருட்களையும் 1–ம் மனுதாரின் தந்தையே வாங்கிகொடுத்தாகவும்,

(iv) திருமணத்திற்கு பின்னிட்டு 1–ம் மனுதாரரே மேற் படிப்பு படிக்க அனுமதி கேட்டபோது இது சம்பந்தமாக எந்தவொரு பேச்சும் எடுக்ககூடாது என்றும். மீறி எடுத்தால் வாழவெட்டியாக விரட்டியதாகவும், மார்ச் 2019 அன்று மார்ச்சில் 1–ம் மனுதாரர் ஆசிரியர் பயிற்சி படிப்பிற்காக அவரது தந்தை ரூ.85,000 வழங்கிய நிலையில் எதிர்மனுதாரடுடன் சென்று தருமபுரியில் ஸ்ரீ லட்சுமி

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.05 06:35:05 +0530

நாராயணா கல்லூரியில் ஆசிரியர் அட்மிசன் செய்துவிட்டு வீட்டுக்கு திரும்பும்போது எதிரில் வந்து பெண்ணைப் பார்த்து அவள் மிகவும் அழகாகவும் கட்டழகுடனும் இருப்பதாகவும், அவன்போன்று இல்லாது சம்மந்தமாக ஆபாச வார்த்தைகளால் திட்டியதால் ஏற்பட்ட வாக்குவாதத்தால் எதிர்மனுதாரர் கண்மூடித்தனமாக அடித்தால் 1–ம் மனுதாரரின் முகம், உடல் முழுவதும் ரத்த காயங்களுடன் மயங்கி விழுந்துவிட்ட நிலையில் அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சை அளிக்காமல் அங்கேயே விட்டுவிட்டு ஓடிவிட்டதாகவும் அக்கம் பக்கத்தினர் தான் மனுதாரரை மீட்டு முதலுதவி சிகிச்சை செய்து பெற்றோருக்கு தகவல் கொடுக்கப்பட்டு காவேரிப்பட்டணம் சண்முகா மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாகவும், எதிர்மனுதாரரின் 1ம் மனுதாரரின் பெற்றோரிடம் மனுதாரரை அடிக்காமல் பார்த்துக்கொள்வதாக உறுதியளித்து வேலை நிமித்தமாக பெங்களூர் செல்ல இருப்பதால் 1ம் மனுதாரை அனுப்பி வைக்க வேண்டி கேட்டுக்கொண்டதன் பேரில் 2019 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் அனுப்பி வைத்த நிலையில் எதிர்மனுதாரர் தனது நடத்தயை மாற்றிக்கொள்ளாமல் மற்ற பெண்களை பற்றி வற்னித்து 1ம் மனுதாருடன் வாழ விருப்பம் இல்லை என்ற கூறி அவரது பெற்றோர் வீட்டிற்கே செல்லும்படி வற்புறுத்தியதால் மறுப்பு தெரித்தவரை எதிர்மனுதாரர் கடுமையாக தாக்கியதில் வலி தாங்க முடியாமல் வீட்டின் மேல்புறத்தில் இருந்து கீழே இறங்கி சென்றபோது எங்கே ஓடுகிறாய் தேவிடியா நில்லுடி உன்னை கொன்றுவிட்டு நா வேற பொண்ணை கல்யாணம்" செய்துகொள்கிறேன் என்று கூறியவாறே 1ம் மனுதாரர் கர்ப்பிணியாக என்றும் பாராமல் துரத்தி சென்று கழுத்தில் சுற்றி தரதரவென்று வீட்டிற்கு கீழிருந்து மேலாக இழுத்து சென்றதில் குரல்வளை நசுக்கப்பட்டு 1ம் மனுதாரர் மூச்சு விடுவதற்கே சிரமப்பட்டு வந்த நிலையில் போன் மூலம் தகவல் சொல்லவே மறுநாள் 1ம் மனுதாரரின் தந்தை மீட்டு வந்ததகாவும்,

(v) எதிர்மனுதாரரின் சித்தரவதையை எண்ணி மனஉளைச்சலாகி பூச்சி மருந்து குடித்து தற்கொலைக்கு முயன்ற நிலையில் 1ம் மனுதாரரின் பெற்றோர்கள் அவரை மீட்டு பாலக்கோடு அரசு மருத்துவமனையில் சேர்த்து காப்பாற்றியதாகவும், 1ம் மனுதாரர் விஷம் குடித்த விபரத்தை எதிர்மனுதாரரிடம் கூறியபோது இன்னும் சாகவில்லையா என்று பேசி மனஉளைச்சலை" ஏற்படுத்தியதாகவும் எதிர்மனுதாரர் அவரது பெற்றோர்களின் தூண்டுதலின் பேரில் மீண்டும் சேர்ந்து வாழ வேண்டுமெனில் வீடு கட்டுவதற்கு 15 லட்சம் கொடுத்தால் மட்டுமே வாழ முடியும் என்று கூறிய நிலையில் கிருஷ்ணகிரி அனைத்து மகளிர் காவல் நிலையம் 1ம் மனுதாரர் புகார் அளித்தாகவும்.

(vi) புகாரின் மீது விசாரணை மேற்கொண்டு இரு தரப்பினரையும் சமாதனம் பேசியதில் இருவரும் சேர்ந்துவாழ்வதற்காக எதிர்மனுதாரர் வீட்டிற்கு சென்றபோது காவல் நிலையத்தில்புகார் கொடுத்து அவமானப்படுத்திவிட்டதால்

AJAY VIKRESH KUMAR G Digitally signed by AJAY VIKRESH KUMAR G Date: 2026.05.05 06:35:10 +0530

எக்காரணத்தை கொண்டும் 1ம் மனுதாரரை மனைவியாக ஏற்கமாட்டேன் என்று கூறி 1ம் மனுதாரர் 7 மாத கர்ப்பினியாக இருந்த நிலையில் கருவை கலைத்துவிடுமாறு தாக்கியநிலையில் உடல் நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளித்தாகவும், 1ம் மனுதாரர் மீது கிருஷ்ணகிரி காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்து மகேந்திமங்கலம் காவல் நிலையத்திற்கு அனுப்பப்பட்டு சமரச விசாரணையின் போதே எதிர்மனுதாரரின் குடும்பத்தார் தகராறு செய்துவிட்டு சென்றதாகவும் அதற்கு பின்னிட்டு 1–ம் மனுதாரர் தான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ மறுப்பதாக பொய் புகார்களை கூறி வந்த நிலையில் கிருஷ்ணகிரி குடும்ப நல நீதிமன்றத்தில் மணவாழ்க்கை சேர்ந்து வாழ கோரி எதிர்மனுதாரர் மனு தாக்கல் செய்து அதனை திரும்ப பெற்றுக்கொண்டதாகவும், பின்னிட்டு தான் 22.10.2021 அன்று லித்திஸ் என்ற ஆண் குழந்தை இரண்டாவதாக பிறந்ததாகவும் எதிர்மனுதாரரிடம் திலகவதியுடன் பழக்கத்தை விட்டுவிட்டு கணவன் மனைவியாக சச்சரவு இல்லாமல் வாழலாம் என்று கூறியதற்கு திலகவதியுடன் உள்ள உறவை முறித்துக்கொள்ள மறுத்துவிட்டதாகவும் எதிர்மனுதாரர் திருமணம் ஆன நாள் முதலே திகலவவதியுடன் எந்நேரமும் போனில் பேசிக்கொண்டும் வெளியூர் செல்வதாக கூறி திலகவதியை சந்திக்க காஞ்சிபுரம் சென்ற நிலையில் எதிர்மனுதாரரின் பெற்றோர். அண்ணன் மாரியப்பன் ஆகியோருடன் தெரிவிக்க அதனை கண்டிக்காமல் ஆதரித்தே வந்ததாகவும், 1–ம் மனுதாரரின் தந்தை நீரிழிவு நோயாளி இருந்ததால் தனது தந்தையின் உடல்நலம் கெட்டுவிட கூடாது என்பதற்காக திலகவதி உடனான உறவை தனது பெற்றோர்களிடம் கூறாமல் மறைத்துவிட்டதாகவும்.

(vii) பின்னிட்டு 05.12.2021ம் மதியம் 12.00 மணியளவில் எதிர்மனுதாரர், 1–ம் மனுதாரர் வீட்டிற்கு வந்து நீ உயிருடன் இருந்தால் திலகவதியுடன் வாழ முடியாது என்று கூறி 1–ம் மனுதாரரின் கழுத்தை பிடித்து இறுக்கியதாகவும் அந்த பிடியிலிருந்து தப்பிக்க முயற்சித்தபோது 2 ம் மனுதாரரை அடித்து கொன்றுவிடுவதாக கூறி நீண்ட தூரம் தரதரவென்று இழுத்து சென்ற நிலையின் தோள்பட்டை வலி தாங்காமல்கத்தியதால் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறிவிட்டு 2ம் மனுதாரரின் தெருவில் வீசி சென்ற CCTV பதிவுகளும் புகைப்படமும் புகாருடன் இணைக்கப்பட்டுள்ளதாகவும்.

(viii) எதிர்மனுதாரரின் குடும்பத்தார் திடீரென்று பணப்பிரச்சனை ஏற்பட்ட நிலையில் 1–ம் மனுதாரருக்கு திருமணத்தன்போது சீர்வரிசையாக கொடுத்த நகைகளை காவேரிப்பட்டணம் இந்தியன் வங்கி கிளையில் 1–ம் மனுதாரர் பெயரில் பவுன் நகையும். மீதமுள்ள 11 பவுன் நகையை எதிர்மனுதாரரின் தந்தை பெயரிலும் அடகு வைத்து எதிர்மனுதாரர் பணம் பெற்றுக்கொண்டதாகவும், எதிர்மனுதாரர் கணவன் மற்றும் தந்தை என்ற முறையில் மனுதாரர்களுக்கு எவ்வித பராமரிப்பும் செய்யாமல் தன் தோன்றித்தனமாக திலகவுடன் தகாத உறவு

AJAY VIKRESH KUMAR G — Digitally signed by AJAY VIKRESH KUMAR G Date: 2026.05.05 06:35:16 +0530

கொண்டு சம்பாதிக்கும் பணத்தை செலவு செய்து வரும் நிலையில் 1–ம் மனுதாரர் பெற்றோர் வீட்டில் இருந்துக்கொண்டு 2, 3 மனுதாரர்களை பராமரிக்கவும் மருத்துவ செலவுகள் செய்ய முடியாமல் கஷ்ட ஜீவனம்சம் செய்து வருவதாகவும், மனுதாரர்களுக்கு அத்தியாவசிய தேவையான இருக்க இடம், உண்ணும் உணவு, உடுத்தும் உடை, மருத்துவ செலவு போன்றவைகளை செய்ய எதிர்மனுதாரர் சட்டப்படி கடமைப்பட்டவர் ஆவார் எனவும்,

ix) எதிர்மனுதாரர் தற்பொழுது பர்கூரில் உள்ள ABC Fruits கம்பெனியில் Senior Executive ஆக பணிபுரிந்து மாதம் ரூ.24.050 சம்பளமும் எதிர்மனுதாரருக்கு சொந்தமான 612 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்து அதன் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.30,000/– வரை வருமானம் ஈட்டி வருகிறார் எனவும்,

x) மனுதாரர்களுக்கு துணிமணி, இருப்பிடம், மருத்துவம், மற்றும் இதர செலவுகளுக்கு பிரதி மாதம் ஒன்றுக்கு தலா ரூ.10000/– செலுத்த எதிர்மனுதாரர் கடமைப்பட்டுள்ளார். மேற்படி தொகையை செலுத்த எதிர்மனுதாருக்கு வசதியும், வாய்ப்பும் உள்ளது, மேற்படி எதிர்மனுதாரர் செலுத்த உத்தரவிடுமாறு மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்**

i) எதிர்மனுதாரர் திருமணத்திற்கு முன்பு காஞ்சிபுரம் மாவட்டம் உரகடம் ஊரில் வேலை செய்த போது உடல் நலம் சரியில்லாமல் போகவே பண்ருட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபோது காய்ச்சல் அதிகமாகிவிட்ட நிலையில் திலகவதி (வயது 46) என்ற செவிலியர் தாய்போல் கவனித்து காப்பாற்றிய நிலையில் நன்று மறவாமல் திலகவதியை அழைத்த நிலையில் 12.09.2018– ம் தேதி நடைபெற்ற திருமண வரவேற்பு விழாவிற்கு திலகவதி வந்ததாகவும், மனுவில் தவறாக சித்தரித்து கூறப்பட்டுள்ள சங்கதியானது எதிர்மனுதாரருக்கு மன உலைச்சலை தந்ததாகவும் எதிர்மனுதாரரும் 1–ம் மனுதாரரும் கூட்டுக்குடும்பமாக எதிர்மனுதாரர் வீட்டில் 6 மாதம் மட்டுமே வாழ்ந்து வந்த நிலையில் பெங்களூரில் உள்ள சொடக்சோ என்ற நிறுவனத்தில் எதிர்மனுதாரர் 3 வருடமாக வேலை செய்த காலகட்டத்தில் 1–ம் மனுதாரரை பெங்களுக்கு அழைத்து சென்றுவிட்டதாகவும்

ii) பெங்களூரில் 3 மாதங்கள் மட்டுமே சுமுகமாக வாழ்ந்த நிலையில் யுகாதி பண்டிகைக்கு 1–ம் மனுதாரர் வீட்டிற்கு வந்துவிட்ட நிலையில் மறுநாள் விஷம் குடித்தாக எதிர்மனுதாரருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதன் பேரில் பாலக்கோடு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றும் மனுதாரரை விசாரித்ததற்கு மனுதாரர் தன்னுடைய பெற்றோர்கள் திட்டியதால் குடித்துவிட்டதாக

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.05 06:35:21 +0530

சொன்னதாகவும் அதற்கு பின்னிட்டு 1 நாட்கள் கழித்து எதிர்மனுதாரர் பெங்களுருக்கு வேலைக்கு சென்ற நிலையில் 3 நாட்கள் கழித்து 1ம் மனுதாரரும் வந்துவிட்டதகாவும். 2019 ல் மே மாதம் சட்ட மன்ற தேர்தல் நடந்த போது ஓட்டுபோட 1-ம் மனுதாரரை அழைத்ததற்கு சண்டையிட்டுக்கொண்டு எதிர்மனுதாரர் வீட்டிற்கு வர மறுத்துவிட்டு 1ம் மனுதாரர் அவரது தந்தைக்கு கைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசிய நிலையில் அவரது தகப்பனார். பெரியப்பா செல்வம். நஞ்சுண்டன் ஆகிய மூவரும் வந்து அன்றைய தினம் இரவு 01.00 மணியளவில் அழைத்து சென்றதாகவும், பின்னிட்டு 112 மாதம் கழித்து 1ம் மனுதாரரின் பூர்வீகமான வீரசலூரில்வைத்து பஞ்சாயத்து பேசியபோது சொன்னபடி நடக்காவிட்டான் சபையை விட்டு வெளியே போடா என்று கூறியதால் இருசக்கர வாகனத்தை எதிர்மனுதாரர் எடுக்கசென்றபோது அதனை தான் வாங்கி கொடுத்தது என கூறி 1-ம் மனுதாரரின் தந்தை பிடுங்கி கொண்டதாகவும் பின்னிட்டு 10 நாள் கழிந்து 1-ம் மனுதாரரின் சித்தப்பா சரவணன் அறிவுரை கூறி அனுப்பி வைப்பதாக சொல்லிய நிலையில் 1-ம் மனுதாரர் பெங்களூரில் இருந்ததாகவும், பின்பு எதிர்மனுதாரரி சம்பவத்திற்கு மாரியப்பன் குடும்பத்தில் பிரச்சனை செய்யாமல் மோல்டு போட்ட வீடு கட்டியதற்கான செலவு தொகையில் பாதி ரூ. 15,00,000 த்தில் பாதி கொடுத்துவிடுவதாக கூறி 1-ம் மனுதாரர் வரதட்சணை கேட்டதாக கூறி தனது பெற்றோர் வீட்டிற்கு வந்துவிட்டதாகவும்,

iii) பின்னிட்டு 2019 நவம்பர் 2- வது வாரத்தில் கிருஷ்ணகிரி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வரதட்சணை கேட்டதாக புகார் கொடுத்து உதவி ஆய்வாளர் விசாரித்தபோது 15 பவுன் தங்க நகைகளையும், இருசக்கர வாகனத்தையும் பிடுங்கிக்கொண்ட நிலையில் எப்படி வரதட்சணை கேட்கிறார் என்று கேட்டதற்கு 1- ம் மனுதாரர் பதில் எதுவும் சொல்லாத நிலையில் புத்தி மதி அளித்து எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழுமாறு கூறியதற்கு பெங்களுருக்கு அழைத்து சென்றால் மட்டுமே வரமுடியும் என்று கூறியதால் அவரது விருப்படி பெங்களூரில் 3 மாதம் நன்றாக வாழ்ந்ததாகவும் பின்னிட்டு 7 மாத கர்ப்பிணியாக இருந்தபோது இரவு 7.00 மணிக்கு தான் சிப்டு நேரம் முடிந்து வந்தபோது தாமதமாக வருவது சம்மந்தமாக கேட்டதற்கு காலை 9.30 – 07.00 மணி வரை ஜன்ரல் சிப்டு என்று கூறியபோதும் ஒப்புக்கொள்ளாமல் வீணாக சந்தேகப்பட்டு 1-ம் மனுதாரரின் பெற்றோருக்கு தகவல் தெரிவித்து 7 நபர்கள் வந்து 19.02.2020 ம் தேதியில் எதிர்மனுதாரரை பிடித்துக்கொண்டு அடித்து முகத்தினை நகத்தால் கீறி காயம் ஏற்படுத்திவிட்டு இனிமேல் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ முடியாது என்று கூறிவிட்டு வீட்டில் உள்ள பொருட்களை எல்லாம் எடுத்து சென்றுவிட்டதாகவும்,

(iv) அதற்கு பின்னிட்டு தான் 1-ம் எதிர்மனுதாரர் மீது கிருஷ்ணகிரி காவல் கண்காணிப்பாளிடம் புகார் கொடுத்தாகவும் உதவி ஆய்வாளர் விசாரணை

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.05 06:35:26 +0530

செய்தார். 27.02.2020ம் தேதி 1–ம் மனுதாரர் மாத கர்ப்பிணியாக இருந்ததாகவும், 1ம் மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என்று கூறிய நிலையில் குழந்தை பிறந்த பின்பு சரியாகிவிடும்என்று அறிவுரைகூறி அனுப்பி வைத்ததாகவும் அதற்கு பின்பு குழந்தை பிறந்தது சம்மந்தமாக எதிர்மனுதாரருக்கு தகவல் எதுவும் கொடுக்காத நிலையில் 12.05.2020 மாலை 6:37 மணிக்கு தருமபுரி அரசு மருத்துவமனையில் பெண் குழந்தை பிறந்ததாக Message அனுப்பியதாகவும், மனுதாரர் 7 மாத கர்ப்பிணியாக இருநத்போதே பிரச்சணை செய்து அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்று எந்த ஒரு பேச்சுவார்த்தையும் இல்லாத நிலையில் குழந்தை பிறந்தும் வரக்கூடாது என்றும். மீறி வந்தால் பிரச்சனை ஏற்படும் என்று சொல்லிய நிலையில் 12 மனுதாரர்களுக்கு உண்டான அடிப்படை தேவைகளை செய்திருக்க இயலாது என்றும் மனுதாரருக்குண்டான மேற்படிப்பிற்குண்டான செலவுகளை எதிர்மனுதாரரே செய்வதாகவும் அதற்கு மின்னிட்டு பெங்களுருக்கு சென்று குடும்பம் நடத்திய நிலையில் எதிர்மனுதாரருடன் ச ண்டை பிடித்துக்கொண்டு இரவு 01.00 மணிக்கெல்லாம் சென்றுவிட்டதாகவும்.

v) எதிர்மனுதாரரின் சகோதரர் மாரியப்பன் மகள் மகாலட்சுமிக்கு 27.01.2022 ம் தேதி திருமணம் நிச்சயித்து திருமண பத்திரிக்கையை மாரியப்பன் மகன் சக்திவேல் மற்றும் அவரது மனைவி சத்யா இருவரும் 1–ம் மனுதாரரின் பெற்றோர் வீட்டிற்கு சென்று பத்திரிக்கை வைத்ததகாவும், அப்போது 1, 2 மனுதாரர்கள் மற்றும் 1ம் மனுநாரரின் பெற்றோர்கள் திருமணத்திற்கு வந்திருந்ததாகவும், பின்னிட்டு எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் 1–ம் மனுதாரரின் வீட்டிற்கு சென்று பஞ்சாயத்து பேசியதில் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பம் தெரிவித்தால் 1, 2 எதிர்மனுதாரர்கள் வந்த நிலையில் எதிர்மனுதாரர் பெங்களூரில் உள்ள வேலையை விட்டுவிட்டு சவூளுர் கிராமத்திற்கு வந்து 1–ம் மனுதாரருடன் குடும்பம் நடத்தியதில் ஜானுஸ்ரீ என்ற பெண் குழந்தை பிறந்தததாகவும், அந்த பெண் குழந்தை தான் 2– ம் மனுதாரர் என்றும் எனவே. 2 வது குழந்தை 7 மாத கருவை கலைத்துவிடுவதாக வற்புறுத்தியதாக கூறுவது உண்மைக்கு புறம்பானது எனவும்

vi) 1–ம் மனுதாரர் தன் விருப்பம் போல் வாழ வேண்டியே எதிர்மனுதாரர் மீது வீண் பழிசுமத்தி குறுக்கு வழியில் ஆதாயம் தேடவும், 1–ம் மனுதாரர் தன் குடும்பத்தாரின் தூண்டுதல் பேரில் ஜீவனாம்சம் கோரி மனு தாக்கல் செய்துள்ளார், எதிர்மனுதாரர் 1–ம் மனுதாரரின் கொடுமைகளை பொறுத்துக்கொண்டு குழந்தையின் நலனுக்காகவே தற்போதும் 1–ம் மனுதாரருடன் சேர்ந்து வாழவே விரும்புகிறார் எனவும், எதிர்மனுதாரர் இல்வாழ்க்கை தொடர சந்தர்ப்பம் அளிக்க வேண்டியது 1–ம் மனுதாரரின் கடமையாகும், 1–ம் மனுதாரர் தன்னிச்சையாக எதிர்மனுதாரர் வீட்டை விட்டு சென்றுவிட்டதால் ஜீவனாம்சம் கோர

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.05 06:35:31 +0530

அருகதையற்றவர் எனவும் மனுதாரர் கூறியுள்ள ஜீவனாம்ச தொகை கிடைக்கத்தக்கதல்ல எனவும் மனுதாரர் மனுவினை தள்ளுபடி செய்யுமாறு கூறியுள்ளார்.

4) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

5) மனுதாரர் தரப்பில் 1–ம் மனுதாரர் திரு.மங்கம்மாள் என்பவர் ம..சா.1 – ஆக விசாரணை செய்யப்பட்டார். மேற்படி மனுதாரரை எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.28 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் தரப்பில் திரு.சபரி என்பவர் ம.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். ம.சா.2–ஐ எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. ம.சா.2 வாயிலாக ம.சா.ஆ.29 மற்றும் ம.சா.ஆ.30 ஆகிய ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் திரு.மாரிமுத்து எ.ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.1 மற்றும் எ.ம.சா.ஆ.2 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>6) தற்போது தீர்மானிக்கப்படவேண்டிய சங்கதி மனுதாரர்களின் மனு அனுமதிக்கதக்கதா? அல்லது இல்லையா? என்பதை ஆகும்.</u>**

**7) <u>தீர்வு</u>**

i) வழக்கில் இருதரப்பிலும் 1 –வது மனுதாரருக்கு எதிர்மனுதாரருக்கு இடையே ஏற்பட்ட திருமணத்தை ஒப்புக்கொண்டுள்ளார்கள். மேலும் 2 மற்றும் 3வது மனுதாரர்கள், 1–ம் மனுதாரருக்கும் எதிர்மனுதாரராக்கும் திருமணத்தின் பயனாக பிறந்ததாக இருதரப்பிலும் ஒப்புக்கொண்டுள்ளார்கள், எனவே 1 முதல் 3 மனுதாரர்கள் எதிர்மனுதாரரின் மனைவி மற்றும் குழந்தைகள் என நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர்கள் தரப்பில் 1–ம் மனுதாரர் மற்றும் எதிர்மனுத்தாருக்கும் இடையே நடைபெற்ற திருமண அழைப்பிதழ் ம.சா.1 ஆகவும் 2 மற்றும் 3 மனுதாரர்களின்பிறப்பு சான்றிதழ்களை ம.சா.4 மற்றும் ம.சா.9 ஆவணங்கள் மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

ii) 1–வது மனுதாரர் எதிர்மனுதாருக்கு திருமணத்தின் போது திலகவதி என்று பெண்ணை நண்பர் என கூறிக்கொண்டு அந்த பெண்ணுடன் இயல்புக்கு மாறான நிலையில் புகைப்படம் எடுத்துக்கொண்டதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் மேற்படி உறவு சம்பந்தமாக சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் நிரூபிக்கபடவில்லை. மேலும் 2019 ஆம் தேதி மார்ச் மாதம் 1 –ம் மனுதாரர் மற்ற பெண்கள் போல அழகாக இல்லை என ஆபாசமான

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.05 06:35:37 +0530

வார்தைகளால் திட்டி கண்முடித்தனமாக அடித்து முகம் மற்றும் உடல் முழுவதும் ரத்த காயங்கள் ஏற்படுத்தினார் எனவும், பின்னர் 2019 ஆண்டு ஏப்ரல் மாதம் பெங்களூருக்கு எதிர்மனுதாரருடன் சென்றதாகவும் அங்கும் எதிர்மனுதாரர் மற்ற பெண்கள் போல் அழகாக இல்லை என கூறி எதிர்மனுதாரர் தாக்கியதாகவும் வலி தாங்க முடியாமல் வீட்டின் முன்புறத்தில் இருந்து கிழே சென்ற போது உன்னை கொன்று விட்டு வேறு பெண்ணை திருமணம் செய்து கொள்வதாக கூறிக்கொண்டு கழுத்தில் அணிந்திருந்த துப்பட்டாவை இழுத்து தரதரவென இழுத்து சென்றார் எனவும், அதனால் 1 வது மனுதாரர் தனது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டதாகவும் அதன் பிறகு சேர்ந்து வாழ 15 லட்சம் கொடுத்தால் மட்டுமே மீண்டும் சேர்ந்து வாழ்வதாக கூறியதாகவும் இது சம்பந்தமாக அனைத்து மகளிர் காவல் நிலையம் கிருஷ்ணகிரியில் 1 வது மனுதாரர் புகார் அளித்தார் என சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி புகார் மனு மற்றும் மனு ரசீது எண்.297/2019 ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி புகார் மனு வாயிலாக வரதட்சனை கேட்டு கொடுமை செய்தாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என தெரியவருகின்றது. இது சம்பந்தமாக எதிர்மனுதாரர் தனது சாட்சியத்தில் தன்னிடம் தான் வீடு கட்ட பணம் கேட்டார்கள் எனவும், தனது எதிருரையில் எதிர்மனுதாரரிடம் அவரது பங்கை அவரது சகோதரர் கேட்டதாகவும் அதற்கு 1–வது மனுதாரர் வரதட்சணை கேட்டதாக நினைத்துக்கொண்டு அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்று விட்டதாக சொல்லப்பட்டுள்ளது. மேலும் 05.12.2021 ஆம் தேதி எதிர்மனுதாரர் மனுதாரர் வீட்டில் சென்று 1 –வது மனுதாரரை தாக்கி கழுத்தை இறுக்கி –வது மனுதாரரை நீண்ட தூரம் இழுத்து சென்றார்கள் எனவும் இது சம்பந்தமாக மகேந்திரமங்கலம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது எனவும், மேற்படி புகார் மனு ம.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

iii) மேலும் எதிர்மனுதாரர் 1–வது மனுதாரருடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளதாக எதிருரையில் சொல்லப்பட்டுள்ள நிலையில் ம.சா.ஆ.14 ஆவணம் அடிப்படையில் மனுதாரருடன் சேர்ந்து வாழ வேண்டி எதிர்மனுதாரர் கிருஷ்ணகிரி, மண்புமிகு குடும்ப நல நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகின்றது. மேலும் மேற்படி வழக்கு HMOP No.180/2022 ஆக விசாரிக்கப்பட்டு 12.12.2023 –ம் தேதி எதிர்மனுதாரர் கோரிய பரிகாரத்தை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

iv) எதிர்மனுதாரர் தனது குறுக்கு விசாரணையில் "சுகஸ்ரீ என்ற பெண்ணை திருமணம் செய்துகொள்ளவில்லை எனவும் ஆனால் 28.06.2023 ஆம் தேதி கிருஷ்ணகிரி காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் ஆஜர் ஆனேன் எனவும் தகவல் கிடைத்து 1–வது மனுதாரரும் சுகஸ்ரீ என்ற பெண்ணின் பெற்றோரும் அனைத்து மகளிர் காவல் நிலையம் வந்தார்கள் எனவும் சாட்சியம் அளித்துள்ளார். ம. சா. 1 தனது குறுக்கு விசாரணையில்

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.05 06:35:43 +0530

ம.சா.ஆ.14 தீர்ப்பில் எதிர்மனுதாரர் சுகஸ்ரீ என்ற பெண்ணை திருமணம் செய்துகொண்டதால் தள்ளுபடி செய்யப்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார்.. மேலும் ம.சா.ஆ.14 ஆவணத்தின் படி மேற்படி காரணத்திற்காக மனு தள்ளுபடி செய்யப்பட்டது என தெரியவருகின்றது.

v) எனவே மேற்படி விவாதங்கள் அடிப்படையில், மனுதாரர்களை கணவர் மற்றும் தந்தை என்ற முறையில் பராமரிக்க எதிர்மனுதாரர் கடமைப்பட்டவர் என இந்நீதிமன்றம் கருதுகின்றது.

vi) மனுதாரர்கள் தரப்பில் கிருஷ்ணகிரி, சரஸ்வதி மருத்துவமனையின் CEO திரு.சபரி, ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார், அவரது சாட்சியத்தின் படி தற்போது எதிர்மனுதாரர் சரஸ்வதி மருத்துவமனையில் வேலை செய்வதாகவும், அவரது ஊதிய பட்டியல் ம.சா.ஆ.29 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ம.சா.2 தனது சாட்சியத்தில் ம.சா.ஆ.29 –ல் காண்பிக்கப்பட்டுள்ள தொகை எதிர்மனுதாரருக்கு உண்டான போக்குவரத்து மற்றும் பொருட்கள் தொகைகளை உள்ளடக்கம் என சாட்சியம் அளித்துள்ளார். மேலும் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் தற்காலிக பணியாளராக 3 மாதங்கள் மட்டும் பணிபுரிந்தார் என சாட்சியம் அளித்துள்ளார். எனவே எதிர்மனுதாரரின் மாத வருமானம் பிரதி மாதம் ரூ.24,000/– சம்பாதிப்பதாக சொல்லியுள்ள நிலையில் மேற்படி சம்பளத்தை நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும் எதிர்மனுதாரர் சொந்தமாக 8 1/2 ஏக்கர் நிலம் உள்ளதாக சொல்லியுள்ள நிலையில் கணினி பட்டா ஆவணங்கள் ம.சா.ஆ.22 முதல் ம.சா.ஆ.26 குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்கள் எதிர்மனுதாரர் தந்தை கண்ணு பெயரில் உள்ளதாக ம.சா.1 சாட்சியம் அளித்துள்ளார். எதிர்மனுதாரர் தனது குறுக்கு விசாரணையில் மேற்படி நிலங்கள் தனது தந்தை மற்றும் அவரது சகோதரருக்கு கூட்டாக உள்ளது எனவும் தனக்கு 2 ஏக்கர் நிலம் எம். சவுளூரில் உள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் மேற்படி ஆவண எண்.2493/2021 பாலக்கோடு SRO என மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கு அடிப்படையில் எதிர்மனுதாரர் B.E,. படித்துள்ளார் எனவும், திருமணத்தின் போது பெங்களூரில் வேலையில் இருந்தார் என தெரியவருகின்றது. எனவே எதிர்மனுதாரர் மாத சம்பளம் மற்றும் நிலத்தில் வருமானம் மூலம் மாதம் 30,000/– சம்பாதித்திருப்பார் என இந்நீதிமன்றம் கருதுகின்றது..

vii) மேலும் HMOP No.51/2024 வழக்கில் மாண்புமிகு குடும்ப நல நீதிமன்றம் IA No. 03/2024 நாள் 21.11.2024 இடைக்கால ஜீவனாம்சமாக மனுதாரர்களுக்கு மாதம் ரூ.6,000/– வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது என எ.ம.சா.ஆ.2 ஆவணத்தின் படி தெரியவருகின்றது. மேற்படி இடைகால உத்தரவானது தற்சமயம் நிலுவையில் உள்ளதா? என மனுதாரர் தரப்பில் சாட்சியம் அளிக்கப்படவில்லை. எனவே மேற்படி இடைகால ஜீவனாம்சம் ரூ.6000/–

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.05 06:35:48 +0530

நீதிமன்ற கணக்கில் கொண்டு கீழ்கண்ட ஜீவனாம்சம் தொகை வழங்க உத்தரவிடப்படுகிறது.

viii) மேலும் 2, 3 மனுதாரர்கள் மற்றும் 1–வது மனுதாரர் பராமரிப்புக்கு எதிர்மனுதாரர் கடமைபட்டவர் என இந்நீதிமன்றம் கருதுகிறது. எதிர்மனுதாரர் சம்பாதிக்கும் சக்தி மற்றும் மனுதாரர் சம்பாதிக்கும் தகுதியையும் கருத்தில் கொண்டும், மனைவியை காப்பாற்ற வேண்டிய கடமையும், தன்னுடைய குழந்தையை காப்பாற்ற வேண்டிய கடமையும், சட்டப்படியும் தார்மீக அடிப்படையிலும் எதிர்மனுதாரருக்கு உள்ளது. எனவே 1 முதல் 3 மனுதாரர்களின் உணவு, உடை, இருப்பிடம், மருத்துவம் தேவைக்காக வேண்டி ஜீவனாம்ச செலுத்த வேண்டிய கடமை எதிர்மனுதாரருக்கு உள்ளது என தீர்மானித்து 1–வது மனுதாரருக்கு ஜீவனாம்ச தொகையாக மாதம் ரூ.3000/– மும், 2 மற்றும் 3வது மனுதாரர்களுக்கு ஜீவனாம்ச தொகையாக தலா மாதம் ரூ.3500/– மும், ஆக மொத்த ரூ.10,000/– எதிர்மனுதாரர் செலுத்த கடமைப்பட்டவர் என்று இந்நீதிமன்றம் மேற்கண்ட பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

8) **முடிவாக,** மனுதாரர்களின் மனு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது, 1–வது மனுதாரரின் ஜீவனாம்ச செலவுத்தொகையாக பிரதி மாதம் ரூ.3000/– மும், 2 மற்றும் 3–வது மனுதாரரின் ஜீவனாம்ச செலவுத்தொகையாக பிரதி மாதம் தலா ரூ.3500/– மும், ஆக மொத்த ரூ. 10000/– எதிர்மனுதாரர் மனு தாக்கல் செய்த நாளிலிருந்து உத்தரவு நாள் வரையிலும், உத்தரவு நாளிலிருந்து பிரதி ஆங்கில மாதம் 05 –ம் தேதிக்குள் வரைவோலையாகவோ அல்லது 1–ம் மனுதாரரின் வங்கி கணக்கு மூலமாகவோ அல்லது நேரடியாகவோ 1–ம் மனுதாரர் வசம் செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு அவையறிய பகரப்பட்டது.

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.05 06:35:53 +0530

குற்றவியல் நீதிதுறை நடுவர்

பாலக்கோடு

**<u>அனுபந்தம்</u>**

**<u>1) மனுதாரர்கள் தரப்பு சாட்சி</u>**

1. ம.சா.1 – திருமதி.மங்கம்மாள்
2. ம.சா.2 – திரு.சபரி, CEO, சரஸ்வதி மருத்துவமனை, கிருஷ்ணகிரி

**<u>2. மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள்</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | ம.சா.ஆ.1 | : | 12.09.2018–ம் தேதியிட்ட திருமணப்பத்திரிக்கை – அசல். |
| 2. | ம.சா.ஆ.2 | : | மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் – ஒப்பீடு செய்யப்பட்ட நகல். |
| 3. | ம.சா.ஆ.3 | : | மனுதாரரின் பிறப்பிடச்சான்றிதழ் – கணினி நகல் |
| 4. | ம.சா.ஆ.4 | : | 12.05.2020–ம் தேதியிட்ட 2–ம் மனுதாரரின் பிறப்பு சான்றிதழ் – அசல். |
| 5. | ம.சா.ஆ.5 | : | 2–ம் மனுதாரரின் ஆதார் அட்டை – நகல். |
| 6. | ம.சா.ஆ.6 | : | 24.11.2019–ம் தேதியிட்ட கிருஷ்ணகிரி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் மனுதாரரால் கொடுக்கப்பட்ட புகார் மனுவின் நகல் மற்றும் ஏற்பு ரசீது – கையிருப்பு நகல். |
| 7. | ம.சா.ஆ.7 | : | கிருஷ்ணகிரி குடும்ப நல நீதிமன்றத்தில் மணவாழ்க்கை மீட்டமைவு கோரி தாக்கல் செய்த மனுவின் – நகல். |
| 8. | ம.சா.ஆ.8 | : | 19.02.2020–ம் தேதியிட்ட கிருஷ்ணகிரி காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மனுதாரர் கொடுத்த புகார் மனுவின் – கையிருப்பு நகல். |
| 9. | ம.சா.ஆ.9 | : | 22.10.2021–ம் தேதியிட்ட 3–ம் மனுதாரரின் பிறப்பு சான்றிதழ் – அசல். |
| 10. | ம.சா.ஆ.10 | : | மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள புகைப்படம் மற்றும் CD. |
| 11. | ம.சா.ஆ.11 | : | 05.12.2021–ம் தேதியிட்ட மகேந்திரமங்கலம் காவல் நிலையத்தில் மனுதாரரால் கொடுக்கப்பட்ட புகார் மனுவின் – கையிருப்பு நகல். |
| 12. | ம.சா.ஆ.12 | : | 24.12.2021–ம் தேதியிட்ட மாண்புமிகு முதலமைச்சர் தனிப்பிரிவு சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்ட புகார் மனு மற்றும் அஞ்சலக ரசீது – கையிருப்பு நகல். |

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.05 06:35:59 +0530

| | | |
|---|---|---|
| 13. | ம.சா.ஆ.13 | : 22.01.2022–ம் தேதியிட்ட தருமபுரி காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மனுதாரரால் கொடுக்கப்பட்ட புகார் மனு – கையிருப்பு நகல். |
| 14. | ம.சா.ஆ.14 | : கிருஷ்ணகிரி குடும்ப நல நீதிமன்ற OP No.180/2022 வழக்கில் 12.12.2023–ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் சான்றிட்ட நகல். |
| 15. | ம.சா.ஆ.15 | : கிருஷ்ணகிரி குடும்ப நல நீதிமன்றHMOP No.51/2024–வழக்கில் மனுவின் சார்வு செய்யப்பட்ட – நகல். |
| 16. | ம.சா.ஆ.16 | : 05.04.2024–ம் தேதியில் வழங்கப்பட்ட வில்லங்க சான்று – கணினி நகல். |
| 17. | ம.சா.ஆ.17 | : 20.08.2020–ம் தேதியிட்ட ஸ்கேன் அறிக்கை – அசல். |
| 18. | ம.சா.ஆ.18 | : 30.09.2022–ம் தேதியில் வழங்கப்பட்ட தீபா மைக்ரோ லேப்பின் பரிசோதனை அறிக்கை – அசல். |
| 19. | ம.சா.ஆ.19 | : மருந்து பில்கள் (8 எண்ணிக்கை). |
| 20. | ம.சா.ஆ.20 | : 02.12.2023–ம் தேதியிட்ட கே.ஜி.எம் மருத்துவரின் பரிந்துரை சீட்டு மற்றும் மருத்துவ அறிக்கையின் அசல். |
| 21. | ம.சா.ஆ.21 | : 08.01.2024–ம் தேதியில் 2–வது மனுதாரருக்காக வேண்டி செலுத்தப்பட்ட கல்வி கட்டண ரசீது – அசல். |
| 22. | ம.சா.ஆ.22 | : பட்டா எண்.95–கான பட்டா – கணினி வழி நகல். |
| 23. | ம.சா.ஆ.23 | : பட்டா எண்.2024–கான பட்டா – கணினி வழி நகல். |
| 24. | ம.சா.ஆ.24 | : பட்டா எண்.2133–கான பட்டா – கணினி வழி நகல். |
| 25. | ம.சா.ஆ.25 | : பட்டா எண்.1912–கான பட்டா – கணினி வழி நகல். |
| 26. | ம.சா.ஆ.26 | : பட்டா எண்.2156–கான பட்டா – கணினி வழி நகல். |
| 27. | ம.சா.ஆ.27 | : கிருஷ்ணகிரி குடும்பநல நீதிமன்ற OP No.180/2022 வழக்கின் மாரிமுத்து என்பவரின் சாட்சியம் – சான்றிட்ட நகல். |
| 28. | ம.சா.ஆ.28 | : கிருஷ்ணகிரி குடும்பநல நீதிமன்ற OP No.180/2022 வழக்கின் முனியப்பன் என்பவரின் சாட்சியம் – சான்றிட்ட நகல். |
| 29. | ம.சா.ஆ.28 A | : கிரைய ஆவணம் எண்.2493/2021, பாலக்கோடு SRO. |

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.05 06:36:05 +0530

30. ம.சா.ஆ.29 : கிருஷ்ணகிரி, சரஸ்வதி மருத்துவமனை எதிர்மனுதாரர் ஊதியம் பெறுவதற்கான நிறுவனத்தின் லெஜர் பதிவேடு(14 எண்ணிக்கை) – சான்றிட்ட நகல்.

31. ம.சா.ஆ.30 : ம.சா.2–ன் கிருஷ்ணகிரி, சரஸ்வதி மருத்துவமனையால் வழங்கப்பட்ட Authericiation Letter – அசல்.

**3. எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்**

1 எ.ம.சா.1 – திரு.மாரிமுத்து

**4. எதிர்மனுதாரர் தரப்பு குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள் :**

1. எ.ம.சா.ஆ.1 : 16.06.2022–ம் தேதியிட்ட சமாதான முச்சோலிக்கா சான்றிட்ட நகல்.

2. எ.ம.சா.ஆ.2 : கிருஷ்ணகிரி, மாண்புமிகு குடும்ப நல நீதிமன்றIA No.03/2024 in OP No.51/2024 –ன் இடைகால ஜீவனாம்சம் உத்தரவு சான்றிட்ட நகல்.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.05 06:36:10 +0530

குற்றவியல் நீதிதுறை நடுவர்

பாலக்கோடு